<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>
**<u>OS.No. 1294 / 2022</u>**

வா.சா.1. ராமஅருள்அரசன் 19.11.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.1367/2022ல் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

வா.சா.ஆ.12 கொடிவழி ஜாபிதாவில் சொல்லப்பட்டுள்ள உறவுமுறைகள் உண்மை என்றால் சரிதான். ராமசாமிகவுண்டருக்கு சிவகிரி பழனிச்சாமி மற்றும் செம்பாகவுண்டர் என்ற இரண்டு மக்கள் தான் என்றால் சரிதான். தாவா சொத்து சிவகிரிபழனிச்சாமிக்கும் செம்பாகவுண்டருக்கும் மட்டும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். சிவகிரி பழனிச்சாமிக்கு சரிபாதி செம்பாகவுண்டருக்கு சரிபாதி என்றால் சரிதான். தாவா சொத்து 1 ஏக்கர் 80 செண்ட் என்றால் பூமியில் 1 ஏக்கர் 71 செண்ட் தான் உள்ளது. இதுவரை தாவா சொத்து சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 80 செண்ட் என்றும் நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் 1 ஏக்கர் 80 செண்ட் என்று குறிப்பிட்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 1 ஏக்கர் 80 செண்ட்டில் ராமசாமிகவுண்டரின் மகன்களுக்கு தலா 90 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு 90செண்ட் தான் பாத்தியம் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு எனது அப்பா தியாகராஜனும் பெரியப்பா ராமசந்திரகவுண்டரும் என்ற இரண்டு ஆண் மக்கள் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் உடன் பிறந்தது 3 பெண் மக்கள். செம்பாகவுண்டரின் வாரிசுகளான ராமசந்திரகவுண்டர், தியாகராஜன் மற்றும் உடன் பிறந்த 3 சகோதரிகளுக்கும் தாவா சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. 30.07.1985-ம் தேதிய பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தான் நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்து பூர்விக சொத்து சம்மந்தமாக ஒரு ஆவணம் எழுதப்பட்டால் அந்த சொத்திற்குண்டான அனைத்து வாரிசுகளும் கையெழுத்து செய்தால் தான் அந்த ஆவணம் செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. 30.07.195-ம் தேதிய விடுதலை ஆவணம் ராமசந்திரகவுண்டர் மற்றும் ராமசாமிகவுண்டர் இருவரும் சேர்ந்து தியாகராஜனுக்கு எழுதிக் கொடுத்த பாகபாத்தியவிடுதலை பத்திரம். ராமசந்திரகவுண்டரும் ராமசாமிகவுண்டரும் 30.07.195-ம் தேதிய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட காலத்தில் ராமசாமிகவுண்டரின் ஆண் வாரிசுகளும் ராமசந்திரனின் ஆண் வாரிசுகளும் உயிருடன் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. (சாட்சி தற்போது ராமசந்திரனின் வாரிசுகள் இருந்தார்கள். ராமசாமிகவுண்டருக்கு அப்போது வாரிசுகள் இல்ல என்று சாட்சியம் அளிக்கிறார்.) 2-ம் பிரதிவாதி சிவகிரி பழனிச்சாமி ராமசாமியின் வாரிசு ஆவார். 1985-ம் ஆண்டு அவருக்கு வயது எனக்கு தெரியாது. அவர் இருந்தாரா அல்லது இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆனால் தற்போது அவரை 2-ம் பிரதிவாதியாக சேர்த்து இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கு எழுதிக் கொடுத்த சொத்தை மீண்டும் 2014, 2018-ம் ஆண்டுகளில் மோசடியாக எழுதி வாங்கியதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம். தாவா சொத்து சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரிடமும் நில நிர்வாகஆணையரிடம் நான் வழக்கு நடத்தியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்து சம்மந்தமான வில்லங்கசான்றை இதுவரை நான் பெற்று பார்த்தேனா என்றால் 2018-ம் ஆண்டு பார்த்த பின்பு தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். 2014-ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரமும் 2018-ம் ஆண்டு பிழைதிருத்தல் பத்திரமும் 2-ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்டதை நான் தெரிந்து கொண்டேன் என்றும் அந்த ஆவணங்களை பற்றி நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் திருத்தல் ஆவணம் குறித்து ஏதாவது பரிகாரம் கோரி அதற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் ஏற்கனவே 1985-ம் ஆண்டு எங்களுக்கு இந்த சொத்து பாத்தியம் என்பதால் இந்த மோசடியான ஆவணங்களை வைத்து இடையூறு செய்யக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளோம். 1985-ம் ஆண்டே எங்களுக்கு ஒருமைப்பட்ட சொத்து என்று சொல்லும் நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி ஏன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று என்னால் காரணம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். என்னை இடைஞ்சல் செய்ததால் நான் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் 12.04.1987-ம் தேதிய இனாம் சாசனத்தில் உள்ள கையெழுத்து எனது தந்தையுடையது அல்ல. பழனி நீதிமன்றத்தில் தாவா நிலுவையில் இருக்கும் பொழுது இனாம் சாசனத்தை தாக்கல் செய்ய குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் 2-ம் பிரதிவாதி இந்த இனாம் சாசனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்த பின்பு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இனாம் சாசனத்தை 2-ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும் அந்த இனாம் சாசனம் உண்மை அல்ல என்பதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. 29.09.2021-ம் தேதி எனது வழக்கறிஞருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு 2-ம் பிரதிவாதியால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்பு இந்த இனாம் சாசனம் உண்மை என்று தெரிந்து கொண்டு தான் அதன் மீது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 30.07.1985-ம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலை பத்திரத்தில் ராமசாமிகவுண்டர் மற்றும் ராமசந்திரன் வாரிசு இருக்கும் நிலையில் ராமசாமி மற்றும் ராமசந்திரன் ஆகியோர்களிடம் மட்டும் எழுதிபெற்றதனால் அவர்களின் வாரிசுகளுக்கு தாவாசொத்தில் உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றல் சரியல்ல. அதனால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 12.04.1987-ம் தேதியிட்ட எனது தகப்பனார் தியாகராஜன் 1-ம் பிரதிவாதிக்கு இனாம் சாசனம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதன் அடிப்படையில் தான் தாவா சொத்துக்களை 1-ம்

பிரதிவாதி அனுபவித்து வந்து 2-ம் பிரதிவாதிக்கு 2014-ல் எழுதி வைத்து 2018ம் தேதி திருத்தல் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 02.04.1987-ம் தேதிய குடும்ப ஏற்பாட்டின் மூலம் எனது தந்தை தியாகராஜனும் அவருடன் பிறந்த சகோதரிகளும் 1985-ம் வருடத்தில் ராமசந்திரன் எழுதிக் கொடுத்த தாவா சொத்துக்களையும் வேறு சொத்துக்களையும் மேற்படி குடும்ப ஏற்பாட்டின் மூலம் மீண்டும் ராமசந்திரனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த இரண்டு ஆவணங்களின் படி ராமசந்திரனுக்கு 45 செண்ட்டும் ராமசாமிகவுண்டருக்கு 90 செண்ட்டும் மீதி 45 செண்ட் தான் தியாகராஜன் மகனான எனக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. குடும்ப ஏற்பாட்டின் மூலம் ராமசந்திரனுக்கு தாவாசொத்து 1955ம் ஆண்டு செம்பாகவுண்டர் மற்றும் சிவகிரி பழனிச்சாமிக்கும் ஏற்பட்ட பாக பிரிவினை சொத்துக்களையும் சேர்த்து அவரது மகனுக்கு உயில் எழுதி வைத்து அந்த உயிலின் அடிப்படையில் ராஜேந்திரனும் அந்த சொத்துக்களை கந்தசாமிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை எழுதிக் கொடுத்த தாவாசொத்தில் உள்ள 45 செண்ட்டை இன்று வரை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா முழுசொத்தும் எனக்கு பாத்தியம் இல்லை என்றும் 45 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றும் அதனால் தாவா சொத்து முழுவதையும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ராமசந்திரகவுண்டருக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்றதன் அடிப்படையில் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து பொய்யான சங்கதிகளை தாவாவில் குறிப்பிட்டு பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறு முதல் விசாரணை:

செம்பாகவுண்டர் இறந்தபின்பு தாவா சொத்தில் அவரது மகன்களான தியாகராஜன் மற்றும் ராமசந்திரனுக்கு மட்டுமே பாத்தியம் உள்ளது. அவரது பெண் மக்களுக்கு தாவா சொத்தில் பாத்தியம் இல்லை.

மறு குறுக்கு விசாரணை:

தாவா சொத்துக்களில் செம்பாகவுண்டர் இறந்த பின்பு செம்பாக்கவுண்டரின் வாரிசுகள் அனைவருக்கும் தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.11.20 1:32 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்